உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.302/2021

| | |
|---|---|
| பெயர் | :முகமது பரித்(அ.சா.3) |
| தகப்பனார் பெயர் | :முகமது கனி |
| கணவர் பெயர் | : |
| வயது | :33 |
| கிராமம் | :அறந்தாங்கி |
| வட்டம் | :புதுக்கோட்டை |
| தொழில் | :பஸ் ஓட்டுநர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

21.03.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை யார் என்று தெரியவில்லை. சுமார் 4 – 5 ஆண்டுகளுக்கு முன்னர் நான் லாரி ஓட்டுநராக பணியாற்றி வந்தேன். அல்முபாரக் டிரான்ஸ்போர்ட் லாரி நிறுவனத்தில் ஓட்டுநராக பணியாற்றி வந்தேன். என்னுடைய லாரி முதலாளி பெயர் யூசுப் ஆவார். உடுமலைபேட்டையில் இருந்து காளையார் கோவில் நோக்கி லாரியில் லோடு ஏற்றிக்கொண்டு வந்தேன். கொட்டாம்பட்டியில் இருந்துமேலூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது, லாரிஓட்டுநர்களுக்கு ஓய்வு எடுக்கும் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திவிட்டு சற்று நேரம் ஓய்வுஎடுத்துவிட்டு வண்டியை எடுத்தேன். அப்போது குறுக்கே ஆள் ஒருவர் சாலையின் குறுக்கே படுத்திருந்தது போல் தோன்றியது. நான் மட்டுமே லாரியில் இருந்தேன். கிளீனர் வண்டியில் வரவில்லை. நான் இறங்கி யார் என்று பார்க்க முற்பட்ட போது, என்னை பின்புறமாக வந்து சட்டையை இழுத்து, பிடித்து நான் கட்டியிருந்த லுங்கியை வைத்து என் முகத்தை பின்னால் நின்று கொண்டு முடிவிட்டார்கள், பின்னால் என் கையை இழுத்து கட்டிவிட்டார்கள். என்னை

வண்டியில் பணம் இருக்கும்படி அதை எடுத்துகொடுக்கும்படி கேட்டார்கள். நான் வண்டியில் பணம்இல்லை என்று கூறினேன். என்னை அடித்தார்கள். என்னை கண்ணை கட்டிவிட்டதாலும், இருட்டாக இருந்ததாலும் அடையாளம் தெரியவில்லை. நள்ளிரவு சுமார் 1.30- 2.30 மணியளவில் சம்பவம் நடந்தது. சுமார் 3 – 4 நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தார்கள். என்னிடம் பணம் இல்லை என்று நான் கூறியவுடன் ஒருநபர் மட்டும் லாரி உள்ளே ஏறி சென்று பர்சில் உள்ள 12000ரூபாயை எடுத்துக்கொண்டார். என்னை நடந்த சம்பவத்தை பற்றி கூறினால் என்னை கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். அதன்பிறகு தான் நான் கைகட்டை அவிழ்த்து முகத்தில் இருந்த கட்டையும் அவிழ்த்து பார்க்க முடிந்தது. என்னுடைய ஆடைகளையும் கிழித்துவிட்டார்கள். அதை எடுத்து சரிசெய்து கட்டிக்கொண்டு மேலூர் காவல்நிலையத்திற்கு சென்றேன். காவல்நிலையத்திற்கு காலை சுமார் 3-3.30 மணியளவில் மேலூர் காவல்நிலையத்திற்கு வந்துவிட்டேன். அதன்பிறகு என்னுடைய முதலாளியிடம் நடந்த விபரத்தை கைப்பேசி மூலமாக தெரிவித்துவிட்டேன். காலையில் என் முதலாளி யூசுப் வந்துவிட்டார். சாட்சியிடம் புகார் காட்டப்பட்டு அது தான் கொடுத்தது தான் என்று சாட்சி ஒப்புக்கொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காலை நான் கொடுத்த புகாரை காவலர்கள் பதிவு செய்து கொண்டார்கள். நான் கழுத்தில் அணிந்திருந்த வெள்ளிசங்கிலி, கையில் இருந்த வெள்ளி பிரேஸ்லெட்டையும் கழட்டிவிட்டாக்ள். வண்டியில் வேறு ஒன்றும் இல்லை. வண்டியில் வேஸ்ட் பேப்பர் தான் இருந்தது, வேறு ஒன்றும் இல்லை. வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரித்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

குறுக்கு விசாரணை :

நான் சொல்வது போல, அன்றைய தினம், லாரியில் சரக்கு ஏற்றி வந்திருந்தால் அதற்கு ஆதாரமாக இன்வாய்ஸோ டிரிப்சீட்டோ தாக்கல

செய்திருப்பேன் என்றும், அவ்வாறு இன்வாய்ஸோ, டிரிப்சீட்டோ இருக்கிறதா என்றால் வேஸ்ட் பேப்பர் என்பதால் இன்வாய்ஸ் இல்லை. நான் மேலூர் அருகே வரும்போது, லாரி ஓட்டுநர்களுக்கு ஓய்வெடுக்கும் பார்க்கில் நிறுத்தியிருந்தபோது வேறு வாகனங்கள் இருந்ததா என்றால் இருந்தது. அங்கு ஆட்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். என்னை பின்புறமாக வந்து கண்ணை கட்டிய விபரத்தை என்னுடைய புகாரான அ.சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அவ்வாறு உண்மையில் ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் பார்த்ததை அப்படியே சொல்லியிருப்பேன் என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதால்தான் கண்ணை கட்டியதாக பின்யோசனையுடன் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வண்டியில் இருந்து களவு போன 12000ரூபாயை யாருடைய பணம் என்பது பற்றி என்னுடைய புகாரான அ.சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். களவாடப்பட்ட 12000 ரூபாயை மீட்டு கொடுக்கும்படி நீதிமன்றத்தில் மனு செய்தேனா என்றால் நான் செய்யவில்லை. அவ்வாறு 12000ரூபாய் என்னுடைய தொகை களவாடபட்டிருந்தால் நான் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து பெற்றிருப்பேன் என்றும், அவ்வாறு என் பணம் களவாடப்படவில்லை என்பதால் தான் நான் மனு தாக்கல் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கைக்கட்டை அவிழ்த்த பிறகு ஏன் ஓட்டுநர்கள் ஓய்விடத்திற்கு சென்று உதவிக்கு ஆள் கூப்பிடவில்லை என்றால் நான் நேரடியாக காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன். நான் லாரியுடன் வந்து பஸ்ஸ்டாண்ட் அருகே விசாரித்து மேலூர் காவல்நிலையத்தை விசாரித்து அங்கு சென்றுவிட்டேன். நான் பஸ்ஸ்டாண்ட் அருகே வந்து காவல்நிலையத்தை விசாரித்த விபரத்தை என்னுடைய புகாரிலோ, காவல்துறை வாக்குமூலத்திலோ தெரிவித்துள்ளேனா என்றால் சொல்லவில்லை. அதிகாலை 3.30 மணியளவில் காவல்நிலையத்திற்கு வந்த விபரத்தைஎன்னுடைய

காவல்துறை விசாரணையிலோ, அல்லது அ.சாஆ.3 புகாரிலோ தெரிவித்துள்ளனா என்றால் இல்லை. உண்மையாகவே, நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் குற்றவாளிகளை நான் பார்த்திருப்பேன் என்றும், அவ்வாறு நடக்கவில்லைஎன்பதால் தான் கண்ணை கட்டிவிட்டதாக தவறாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் என் பணம் 12000ரூபாய் களவாடப்பட்டிருந்தால் அதை ஒப்படைக்கும்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றும் அது பொய் என்பதால் தான் அவ்வாறு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.03.21 19:16:58 +0530

Assistant Sessions Judge

Melur